www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

TELO

# LONDON




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே,

எமது மக்கள் இன்று எதிர்நோக்கி வரும் பிரச்சனைகள் தொடர்பாக எமது இயக்கம் கடந்த ஆண்டில் மேற்கொண்ட சில பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய விபரங்களைத் தாங்கிவரும் இச் சிறு வெளியீட்டின் மூலம் உங்களுடன் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் மக்கள் மேற்கொண்டுள்ள இப் பெரும் பயணம் கஷ்டமானது, சிக்கலானது கரடு முரடான பல பாதைகளைத் தாண்டித்தான் இப் புனித பயணத்தினை மேற்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் போராட்டப் பாதையில் 1985 ம் ஆண்டு முக்கிய மைல் கல்லாகும்.

இத் தருணத்தில் எமக்கு ஆத்மீக பலத்தையும், பொருளுதவியினையும் நல்கவேண்டியது உலகம் முழுவதிலும் பரந்து வாழும் உங்களது தலையாய பணியாகும்.

நீங்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும் எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு அம்சங்களையும் உலகம் முழுவதும் நியாயப் படுத்துமாறும், எமது இயக்கத்தினை தொடர்ந்து ஆதரித்து தமிழ் மக்களுக்கான ஒற்றுமையான, உறுதியான தலைமையை உருவாக்க தொடர்ந்து ஆதரிக்குமாறும் தோழமையுடன் வேண்டுகிறேன்.

நன்றி

சிறீ சபாரத்தினம்.

தலைவர்


**143 Wakefield Street**
**East Ham**
**London E6**

**Telephone 01-470 5048**
01-475-0403


Printed by Lowtry Ltd, 21b Old Town, London SW4 0JT

www.tamilarangam.net



we TELO join with the
**Struggling masses**
**in every nook and corner**
**of the world in your revolutionary struggle**

**Our solidarity and support**
**for your struggle is**
**unconditional and everlasting**

**Also, we join with revolutionary movements everywhere to fight against the forces of**

- ★ **Imperialism**
- ★ **Capitalism**
- ★ **Zionism &**
- ★ **Racism**

—sri sabaratnam—

உலகின் மூலை முடுக்குகளில் உள்ள துன்பப்படும் மக்கள் யாவரிடமும், அவர்களுடைய புரட்சிகர விடுதலைப்போரில் 'ரெலோஸ்ட்'டுகள் ஆகிய நாம் இணைகின்றோம்.

உங்கள் போராட்டத்துக்கு நிபந்தனையற்ற நிலையான அனுதாபத்தையும், ஆதரவையும் நல்குகின்றோம்.

அத்துடன் பேரினவாதத்திற்கும், முதலாளித்துவத்திற்கும், இனவாதத்திற்கும், சியோனிசத்துக்கும் எதிராகப்போராடுகின்ற சக்திகள் அகிலத்தின் எப்பகுதியில் இருந்தாலும் அவர்களுடன் நாம் இணைகின்றோம்.

- சிறீ சபாரத்தினம் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இதோ, சிறீ சபா!



'பெல்ஜியத்தில் கைதாகிவிட்டார்!' என்ற சிங்கள புளுகு பிரசாரம் முறியடிப்பு—

## சிறையில் சிக்காத சிங்கம் சிறீ சபாரத்தினம் 'தேவி' இதழுக்கு சிறப்பு பேட்டி!

தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் ரத்தம் சொட்டி வளர்த்த டெலோ (தமிழீழ விடுதலை இயக்கம்) இயக்கம் இப்போது சிறீசபாரத்தினம் என்ற இளைஞர் தலைமையில் வெற்றிகளை குவித்து வருகிறது;

இந்த வீர இளைஞரைத்தான் பெல்ஜியம் தலைநகர் புருசெல்ஸ் நகரில் கைது செய்ததாக புருடா விட்டார்கள்; கைது செய்யப்பட்டவர் சிறீசபாரெத்தினம்தான் என்பதை இலங்கையிலிருந்து சென்ற ரகசிய போலீஸ் அதிகாரிகள் உறுதி செய்ததாகவும் செய்திகளுக்கு உயிரூட்டப் பார்த்தார்கள்;

சிங்கள அரசு சிறீசபாவின் தலைக்கு ரூ: 10 லட்சம் விலை வைத்திருக்கிறது: அது மட்டுமல்ல; வங்கியை கொள்ளை அடித்ததாக குற்றம் சாட்டி 'சிறீசபா'வை பிடிக்க முடியாமலேயே 35 ஆண்டுகள் ஜெயில் தண்டனையும் விதித்திருக்கிறது: அது மட்டுமல்ல; கையாலாகாத காடையர் அரசு ஜெயில் தண்டனையை பிறகு 20 வருஷமாக குறைத்தும் அறிவித்துள்ளது:

ஆனால் சிங்கம் 'சிறீசபா'வை மட்டும் பிடிக்க முடியவில்லை. பெல்ஜியத்தில் அவர் பிடிபட்டு விட்டதாக பொய் சொல்லி மகிழ்ந்து கொண்டது:

சில தினங்களுக்கு முன்பு அந்த சிங்கத்தை 'தேவி' நிருபர் நேரில் சந்தித்து உரையாடிய போது, தமிழ்ப் போராளிகளின் வீரச் செயல்களைக் கேட்டு பெருமை கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது:

சேர, சோழ பாண்டியன் பெருமைகளைப் பேசியும் கடல் கடந்தான் கடாரம் வென்றான், இமயத்தின் முடியில் குறிபொறித்தான் என்ற ஆற்றலைப் பேசியும் வந்த நாம் தமிழ்ப் போராளிகளின் வியத்தகு போர்த் திறமையை நேரில் அறியும்போது- அடடா! மெய்சிலிர்க்கிறது!

சிறீசபாரத்தினம் அன்புடன் கை குலுக்கி வரவேற்றார்; ஆயுதம் ஏந்திப் போரிட்டு காய்த்து உரமேறிப்போயிருந்தன, அவரின் கைகள்!

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் இன்னொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அணியின் தளபதியான முகுந்தன் விடுத்திருக்கும் 'ஒருங்கிணைந்த போராட்ட அழைப்பு' பற்றி கேட்டோம்:

'சபா' உற்சாகத்துடன் அழைப்பை ஏற்றதுடன் ஆர்வத்துடன் சொன்னார்:

''தனித்து நின்று போராட வேண்டும் என்பதை விட, ஆயுதமேந்திய எல்லா விடுதலை அணிகளும் இணைந்து போராடினால்தான் ஈழத்திலுள்ள அப்பாவி தமிழ்மக்களின் அழிவை தடுக்க முடியும் என்று எண்ணுகிறேன். ஒன்றுபட்டு போராடும் முயற்சியில் நாங்கள் முன்னுதாரணமாகவும் திகழ்கிறோம்''

''எங்கள் அமைப்பான டெலோ, மற்றொரு அமைப்பான இ பி ஆர் எல் எப், (EPRLF)



## 'யாழ்தேவி ரெயிலை தகர்த்து 298 சிங்கள ராணுவத்தினரை பிணமாக்கினோம்.''

பிறிதொரு அமைப்பான இ ஆர் ஓ எஸ் (EROS) ஆகிய மூன்றும் இப்போது ஒருங்கிணைந்து செயலாற்றுகின்றன. மற்ற இயக்கங்களையும் இணைப்பதற்கு தொடர்ந்து பேச்சுநடத்தி வருகிறோம். வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கைஇருக்கிறது.

நான் சார்ந்துள்ள 'டெலோ' சார்பில் மற்ற இயக்கங்களுக்கு 'தேவி' மூலம் கோரிக்கை விடுவதை நல்ல வாய்ப்பாக கருதுகிறேன். —எங்கள் விடுதலை முழக்கத்திற்கு உறுதுணையாக நிற்பது 'தேவி' இதழ் என்பதால்!

''நாம் அரசியல் ரீதியாக கொள்கைகளைப் பேசிக் கொண்டிராமல் செயலில் இறங்க வேண்டிய நேரமிது. நாளுக்கு நாள் நம் மக்கள் அங்கே பலியாகிக் கொண்டிருக்கிறார்கள்: நம் இனம் அழிக்கப்பட்டு வருகிறது.

எனவே பேச்சுக்களை நிறுத்திவிட்டு ராணுவ ரீதியில் இணைந்து இயங்குவது அவசியமானது. அவசரமானது: இதைத்தான் மக்களும் விரும்புகிறார்கள். சிங்கள அரசு, பேச்சு வார்த்தை என்பதை ஒருபக்கம் நடத்திக் கொண்டே மற்றொரு பக்கம் தமிழர்களை அழித்துக் கொண்டு இருக்கிறது: அகதிகளாக தப்பி வருபவர்கள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. சிங்களவர்களை நம்பகுதியில் கொண்டு வந்து குடியேற்றுகிறார்கள்;

இந்த நிலையில் நாம் செய்ய வேண்டிய காரியம் ராணுவ ரீதியில் இணைந்து செயல்படுவதே.

இது அவசரமானது—அவசியமானது!!'' என்றார் அவர்.

'சிறி'யின் இந்த கோரிக்கையில் இருக்கும் உணர்வு புரிகிறது. மற்ற இயக்கத்தினருக்கும் புரிய வேண்டும்.

''சிறி! தனி ஈழம் மீட்கப்படுவதற்கு இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகலாம் என்று கூட சொல்லப்படுகிறது. நீங்கள் என்னவென்றால் உடனடியாக இணைந்து போராட வேண்டும் என்கிறீர்கள்? அவசரத்திற்கான காரணம் என்ன?''

''வேறு சில இயக்கத்தினர் அவ்வாறு கருதுவதாகத் தெரிகிறது. அப்படி ஒரு நீண்டகால போரை நடத்தும் போது தமிழ் ஈழத்தில் தமிழர்களே இருக்க மாட்டார்கள். அழிக்கப்பட்டு விடுவார்கள். எனவேதான் 'நேச சக்திகளின்' ஆதரவைப் பெற்று வெகு விரைவிலேயே தமிழ் ஈழத்தை மீட்க வேண்டும். இதுவே எங்கள் நோக்கம்!''

''மூன்று இயக்கங்களும் ஒன்றுபட்டு இருக்கிறீர்களே—சாதனையைச்சொல்ல முடியுமா?''

''முடியும்! நாங்கள் பல பகுதிகளில் பிரிந்து தாக்குதல் நடத்துகிறோம். தொடர்ந்து யாழிலேயே நாங்கள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தால் சிங்கள காடையர்களின் கவனம் ஒரே இடத்தில்தான் இருக்கும். இதை தவிர்க்க பல இடங்களில் திட்டமிட்டு தாக்குதல் நடத்தி அவர்களின் கவனத்தை சிதற அடிக்க முடிகிறது.

இதனால்தான் பல வெற்றிகளை குவிக்க முடிகிறது. உதாரணத்திற்கு சாவகசேரி போலீஸ் நிலையத் தாக்குதல்—யாழ்தேவி ரெயில் கவிழ்ப்பு ஆகியவற்றை சொல்ல முடியும்;

எங்களின் தாக்குதலுக்கு பதில் சொல்ல முடியாத சிங்கள ராணுவம் ஆத்திரப்பட்டு அப்பாவி மக்களை வேட்டையாடும். ஆனால் எங்கள் தாக்குதலின் போது அப்பகுதி அப்பாவி தமிழர்களை அவர்கள் வேட்டையாட விடாமல் தடுத்து விரட்டி விடுகிறோம்;

எடுத்துக் காட்டாக ஒன்றைச் சொல்லுகிறேன்;

முகாமிலுள்ள ராணுவத்தினரை தாக்க நாங்கள் திட்டமிட்டோம்: அதற்காகத்தான் சாவகச்சேரி போலீஸ் நிலையத்தை தாக்குவது என்று முடிவு செய்யப்பட்டது: போலீஸ் நிலையம் தாக்கப்படுமானால் அருகிலுள்ள முகாமிலிருந்து ராணுவம் வந்துதான் ஆக வேண்டும். அப்போது அவர்களை வழியிலேயே மடக்கி அழித்து விடுவது என்று முடிவு செய்தோம்.

அதன்படியே சாவகசேரி போலீஸ் நிலையத்தை நாங்கள் நாசப்படுத்தியபோது கவசவண்டிகளில் யுத்தத்திற்கு செல்வது போல் சிங்கள ராணுவத்தினர் சாவகசேரிக்கு விரைந்தார்கள்:

எந்த வழியாக வருவார்கள் என்பதை முன் கூட்டியே திட்டமிட்டு அறிந்திருந்ததால் 'கைதடி' என்ற இடத்திலேயே டெலோ வீரர்கள் மடக்கி தாக்குதல் நடத்தினார்கள். ஐந்து கவச வண்டிகள் நாசமாயின. 70 சிங்கள ராணுவத்தினர் கொன்றுகுவிக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டார்கள்: ஏராளமான ஆயுதங்களையும் வெடி மருந்துகளையும் கைப்பற்றினோம்.

''சுதந்திரப் போரில் ஈடுபட்டுள்ள நமது வீரர்களுக்கும் அனைத்து வசதிகளோடு அனுப்பப்பட்டு இருக்கும் சிங்கள சிப்பாய்களுக்கும் இடையே பலப்பரீட்சையில் யார் கை ஓங்கி நிற்கிறது?''

''நமது போராளிகளின் கை தான்! இதிலென்ன சந்தேகம்? நமது திறமையை நிரூபித்துக்காட்டியிருக்கிறோம்! நமது போராளி ஒருவனுக்கு 15 சிங்கள ராணுவத்தினர் சமம். நேற்று வரை 36 சிங்கள ராணுவத்தினரா தான் செத்தார்கள் என்று சொல்லி வந்தார்கள்: ஆனால் அண்மையில் ஜே.ஆர். (ஜெயவர்த்தனே) 500-க்கும் அதிகமான ராணுவத்தினர் செத்து விட்டதை ஒப்புக் கொண்டிருக்கிறார்''

தமிழ்ப் போராளிகளை கொன்று விட்டோம், பிடித்து விட்டோம் என்பதெல்லாம் பொய்: அப்பாவி மக்களை பிடித்து சுட்டு விட்டு போராளிகள் சுடப்பட்டு விட்டதாக சொல்லி விடுகிறார்கள்.

''ஆமாம்! உங்களைக்கூட பெல்ஜியத்தில் வைத்து கைது செய்து விட்டதாகவும், இலங்கையிலிருந்து 2 சிங்கள அதிகாரிகள் பெல்ஜியத்திற்கு விரைந்துசென்று கைது செய்யப்பட்டவர் சிறீசபாரத்தினம் தான் என்று உறுதி செய்ததாகவும் கூடசெய்திகள் வந்தன. ஏன் இந்த கோயபல்ஸ் வேலையில் சிங்கள அரசு இறங்க வேண்டும்?''

இந்தக் கேள்விக்கு 'சிறீ' கட்டுப்பாடான ராணுவ வீரனுக்குரிய சிரிப்பை சிரித்தார்! அதாவது புன்னகை மட்டுமே!

''இது சிங்கள அரசின் திட்டமிட்ட சதிவேலை. மக்களை திசை திருப்புவதற்காக பெல்ஜியத்தில் என்னை கைது செய்ததாக செய்திகளை பரப்பினார்கள். இந்த செய்திகளினால் தொடர்பு கொள்ள முடியாதபடி பரவிக் கிடக்கும் போர்முனைகளில் உள்ள போராளிகள் தளர்ச்சி அடைந்து விடுவார்கள் என்று சிங்கள அரசு நினைத்தது.

'டெலோ' இயக்கம் மறுப்பு தெரிவித்திருந்தும் இலங்கையில் உள்ள 2 பத்திரிகைகளில் சிறீசபாரத்தினம் கைது செய்யப்பட்டார் என்று தொடர்ந்து செய்திகளை வரச் செய்தார்கள். டெலோ மறுத்திருந்தும் தொடர்ந்து இம்மாதிரி செய்தி வந்திருப்பதாக கியூபா ரேடியோ ஒலிபரப்பியது.

''நீங்கள் தாக்குதல் நடத்தும்போது தமிழ் மக்களை சிங்களர் பழிவாங்காமல் தடுத்து நிறுத்துவதாகச் சொன்னீர்களே, அது எப்படி சாத்தியமாகும்?''

''நாங்கள் திட்டமிடும் போதே மக்களின் பாதுகாப்பு பற்றியும் சேர்த்துத்தான் திட்டமிடுகிறோம். சாவகசேரி தாக்குத

## 'யாழ்தேவி' ரெயில் எப்படி தகர்க்கப்பட்டது?



இலங்கையில் முருகாண்டி என்ற காட்டுப் பகுதியில் 'யாழ் தேவி ரெயிலை 'டெலோ' வீரர்கள் தகர்த்து 298 சிங்கள ராணுவத்தினரை கூண்டோடு "பரலோகத்துக்கு" அனுப்பிய நிகழ்ச்சி தமிழீழ விடுதலை சரித்திரத்தின் சாதனை அத்தியாயங்களில் ஒன்றாகும்.

சிங்கள சிப்பாய்களை கதிகலங்க வைத்த அந்த நிகழ்ச்சிக்கு சில மணி நேரம் முன்னதாக...

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி விரைந்து கொண்டிருந்த 'யாழ் தேவி' எக்ஸ்பிரசின் எல்லா பெட்டிகளிலும் சீருடை அணிந்த சிங்கள ராணுவத்தினர், நவீன ரக ஆயுதங்களை ஏந்திக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்: கையில் பெரிய ஆயுதமிருந்தாலும் மனதில் நிறைய பயம் இருந்தது;

அவர்கள் பனைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே உள்ள இராணுவ முகாமுக்கு போய்ச் சேரவேண்டும். ரெயிலோ பனையிலேயே நின்று விடும். அதன் பிறகு அவர்கள் டிரக்குகளில் தான் முகாமுக்கு செல்ல வேண்டும்;

காரணம் பனைக்கு அப்பால் யாழ்ப்பாணத்துக்கு ரெயில் போக்குவரத்து நின்று விட்டது.

கொழும்பிலிருந்து புறப்பட்ட யாழ்தேவி பரந்தன் நிலையம்-ஆனை இரவி-பனை இப்படி வரிசையாக வரவேண்டும்.

ஆனால் அதற்கு முன்பாகவே திடீரென்று ரெயில் ஒவென்ற சப்தத்துடன் நின்றது— சிங்கள ராணுவத்தினர் தோட்டாக்கள் அடங்கிய 'மேகசீனை' எந்திர துப்பாக்கிகளில் வேகம் வேகமாக பொருத்திக் கொண்டு கண்டபடி சுட தயாரானார்கள்;

ராணுவ அதிகாரி ஒருவர் வந்தார்.

''பனைக்கு நாம் போக முடியாது: விடுதலைப் போராளிகள் வெடி வைத்து ரெயில் தண்டவாளத்தை தகர்த்து விட்டார்கள்: நாம் டிரக்குகளில் செல்ல முடியாதபடி ரோடுகளிலும் தமிழர்கள் கண்ணி வெடி வைத்திருக்கிறார்கள். ஆனை இரவியில் இறங்கி அந்த முகாமுக்கும் போக முடியாது. வழி நெடுகிலும் கண்ணி வெடிகள் வைத்திருக்கிறார்கள். ஆகவே நாம் திரும்பவும் கொழும்புக்கே திரும்புகிறோம்'' என்று அந்த அதிகாரி சொன்னதும் எல்லா ரராணுவத்தினரும் எச்சரிக்கை அடைந்தார்கள்.

'யாழ்தேவி' திரும்பவும் கொழும்புவுக்கு பயணமானாள்!

இந்த ரெயிலில் கொழும்புவுக்கும் இடைப்பட்ட மற்ற நிலையங்களுக்கும் செல்வதற்காக வந்த தமிழ்ப் பயணிகளை கிளிநொச்சியில் ஏறவிடாமல் 'டெலோ' இயக்கத்தினர் தடுத்து விட்டார்கள். இந்த விஷயம் சிங்கள ராணுவத்தினருக்கு தெரியாது. ஆனால் எப்படியோ 5 தமிழர்கள் மட்டும் இந்த ரெயிலில் ஏறி சிக்கிக் கொண்டனர்.

முருகண்டி காட்டுப் பகுதியில் ரெயில் வேகமாகச் சென்று கொண்டிருந்தபோது...

'படார்! டமார்!!'

ரெயில் பெட்டிகள் சுக்கல் சுக்கலாக வெடித்துச் சிதறின.

ரெயில் பாதையின் ஒரு பக்கத்திலிருந்து டெலோ இயக்கத்தினர் சடசடவென துப்பாக்கிகளால் சுட்டுத் தள்ளினார்கள்.

சிங்கள ராணுவத்தினர் திக்கு முக்காடிப் போய் விட்டார்கள். சற்று நேரத்தில் 298 சிங்கள ராணுவத்தினர் பிணமாக கிடந்தனர். சிதறிக் கிடந்த நவீன எந்திர துப்பாக்கிகளை கைப்பற்றிக் கொண்டு டெலோ வீரர்கள் பத்திரமாக திரும்பினார்கள். ஒரு தமிழ் போராளி கூட உயிரிழக்காமல் இந்த மாபெரும் தாக்குதல் வெற்றிகரமாக நடந்து முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லேயே எடுத்துக் கொள்வோம்; விளக்கமாகவே சொல்கிறேன்!

சாவகசேரியை மையமாகக் கொண்டு குருநகர் முகாம், பலராளி முகாம், ஆனைஇரவி முகாம் என்று மூன்று ராணுவ முகாம்கள் இருக்கின்றன. இந்த முகாம்களிலிருந்து எந்தெந்த பாதைகள் வழியாக வரக்கூடுமோ அந்த பாதைகளில் எல்லாம் கண்ணி வெடிகளை வைத்து விட்டு போராளிகளையும் அனுப்பி விட்டோம்.

நாங்கள் எதிர்பார்த்தபடி வந்தபோது கைதடி என்ற இடத்தில் மடக்கி தாக்குதல் நடத்தி ஒழித்தோம். இதனால் ராணுவத்தினர் எந்த வழிகளில் செல்வது என்பது புரியாமல் முகாம்களிலேயே மடக்கப்பட்டு விட்டார்கள்.

மீறி வந்தால் கண்ணி வெடிகளுக்கு இரையாகி விடுவார்கள்! இதனால் மக்கள் தாக்கப்படுவதில்லை. யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு 10 நாட்கள் பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் எல்லாக் கடைகளும் திறந்திருந்ததோடு நம் மக்களும் தைரியமாக கடைகளுக்கு சென்று வந்தார்கள். நடமாடினார்கள்.

ஏன் தெரியுமா? ராணுவத்தினர் முகாமை விட்டு வெளியேறவே பயந்தனர். எந்த வழியில் போவது என்பது புரியாமல் முகாமுக்குள்ளேயே கிடந்தனர்!''

''எதிர்காலத்தில் எங்கள் தாக்குதல் மிக வலிமையானதாக இருக்கும் என்பதை மட்டும் இப்போது சொல்கிறேன்'' என்று திட்டவட்டமாகக் கூறி விடைபெற்றார், சிறீசபாரத்தினம்.

நிருபரும் கை குலுக்கி விரைவில் 'ஈழம் விடுதலை' பெற வாழ்த்துக் கூறினார்.

''விரைவில் விடுதலை பெற்ற தமிழ் ஈழத்தில் சந்திப்போம்''

—பேட்டி: செல்வி.

---

ரயில் தகர்ப்பு, குண்டுவீச்சு தாக்குதலில் தினமணி 22/1/85

# இலங்கை ராணுவத்தினர் 240 பேர் கொலை

மண்டபம், ஜன. 21—வட இலங்கையில் அண்மையில் நடந்த ரயில் தகர்ப்பு, மற்றும் அதன் பின்பு நடந்த தாக்குதல் சம்பவங்களில் 240 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக இலங்கையிலிருந்து வந்த ஒரு தகவல் கூறுகிறது.

யாழ்ப்பாணத்துக்குத் தெற்கே 100 கிலோ மீட்டர் தொலைவில் இலங்கை ராணுவத்தினர் சென்ற ரயிலை விடுதலை இயக்கப் போராளிகள் கண்ணி வெடி வைத்துத் தகர்த்த சம்பவம் பற்றி மேற்கொண்டு கிடைத்துள்ள ஒரு செய்தி கூறுவதாவது:-

சனிக்கிழமை பிற்பகல் சுமார் ஒருமணியளவில் கிளிநொச்சியிலுள்ள உமையாள்புரத்தில் ரயில் பாதையை விடுதலை போராளிகள் சேதப்படுத்தினர். இதன் காரணமாக கொழும்பிலிருந்து வந்த ரயில் பாண்டிபரந்தனில் நிறுத்தப்பட்டது. பின்னர் அங்கிருந்து இரவு 7-30 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்பட்டது.

பரந்தன் ரயில் நிலையத்தில் 200-க்கு மேற்பட்ட ராணுவத்தினர் இந்த ரயிலில் ஏறினர். அதன்பின் 8 மணியளவில் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் 4 தமிழர்களும், ஒரு புத்தபிட்சுவும், 3 சிங்கள போலீசாரும் ஏறினர்.

ரயில் புறப்படுவதற்கு முன்பாக கிளிநொச்சி ரயில் நிலையத்தில் விடுதலை போராளிகள் "சிங்கள் பகுதியில் பிரச்னை இருந்து வருவதால் ரயிலில் பொது மக்கள் பயணம் செய்யவேண்டாம்" என்று எச்சரித்தார்களாம். இதனால்தான் ரயிலில் 4 பேர் தவிர மற்ற தமிழர்கள் யாரும் ஏறவில்லை என்று கருதப்படுகிறது.

இரவு 8-30 மணிக்கு முருகண்டிக்கும் மாங்குளத்துக்கும் இடையில் விடுதலைப் போராளிகள் ரயிலை வெடிகுண்டு வைத்து தகர்த்தனர். ரயிலின் 12 பெட்டிகள் முற்றிலும் நாசமடைந்துவிட்டன; 2 பெட்டிகள் மட்டுமே தப்பின.

அதேசமயம் ராணுவத்தின் மீது விடுதலைப் போராளிகள் துப்பாக்கியால் சுட்டும், கைக் குண்டுகளை வீசியும் தாக்குதல் நடத்தினர். ராணுவத்தினர் தப்பியோட முயன்றபோதிலும் 200க்கு மேற்பட்ட வீரர்கள் இந்த தாக்குதலில் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ராணுவத்தினரிடமிருந்து பெருமளவு ஆயுதங்களையும் போராளிகள் கைப்பற்றியதாகத் தெரிகிறது.

இச்சம்பவம் பற்றி கேள்விப்பட்டதும் ஆனையிறவு ராணுவ முகாமிலிருந்து சம்பவம் நடந்த இடத்துக்கு வந்துகொண்டிருந்த இலங்கை ராணுவத்தினரை விடுதலைப் போராளிகள் கிளிநொச்சியில் மடக்கி தாக்கினார்கள். இதில் 40 ராணுவத்தினர் மாண்டதாகக் கூறப்படுகிறது.

இதன்பிறகு மாங்குளத்திலிருந்து சம்பவம் நடந்த இடத்துக்கு வந்த ராணுவத்தினர் முருகண்டியில் 8 கடைகளை தீ வைத்து எரித்ததாகத் தெரிகிறது.

## சென்னைக்கு கிடைத்த தகவல்

வட இலங்கை பகுதியில் தமிழ் தீவிரவாதிகள் ரயிலை வெடிவைத்து தகர்த்தது மற்றும் அதன் பின்பு நடந்த தாக்குதல் ஆகியவற்றில் மொத்தம் 240 இலங்கை ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக யாழ்ப்பாணத்திலிருந்து தமக்கு தகவல் கிடைத்துள்ளது என்று உலகத் தமிழ் இளைஞர்கள் சம்மேளனத்தின் தலைவர் டி.ஆர். ஜனார்த்தனம் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலை சபாரத்தினம் தலைமையிலான தமிழ் ஈழ விடுதலை இயக்கம் நடத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 38 என்று இலங்கை அரசு வட்டாரங்கள் கூறின.

---

ரெயில் தகர்ப்பு:

## 250 ராணுவ வீரர் பலி!

### இலங்கையில் !!

கொழும்பு, ஜன. 22—கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சிங்கள ராணுவ வீரர்களை ஏற்றிக் கொண்டு ஒரு ரெயில் புறப்பட்டுசென்றது. இதை தகர்ப்பதற்கு விடுதலை புலி வீரர்கள் திட்டமிட்டு இருந்தனர். இதை அறிந்த அவர்கள் ரெயிலில் மீண்டும் கொழும்பிற்கே திரும்பினர்.

ஆனாலும் விடுதலை புலியினர் கண்ணிவெடிகளை வைத்து ரெயிலை தகர்த்தார்கள். இதில் ஏறத்தாழ 250 பேர் செத்தனர். அவர்கள் அனைவரும் சிங்கள ராணுவ வீரர்கள் என சொல்லப்படுகிறது. இந்த தாக்குதல் இலங்கைஅரசை அதிர்ச்சி அடைய செய்துள்ளது.

---

## ஏகாதிபத்தியத்தினதும், தரகு முதலாளித்துவத்தினதும் கூலிப்படைக்கெதிராக எமது இராணுவம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# If a single well planned assault by TELO could claim 270 Lives of the death squad, Nothing would seem impossible if there is a united effort by all Liberation Organizations

"GUERILLAS . . . ALERTED TAMIL CIVILIANS WHO WERE DUE TO BOARD THE TRAIN AT KILINOCHCHI"
- INT. HERALD TRIBUNE

**Sri Lanka train toll rises to 38**

Colombo – The death toll in Saturday's ambush, when Tamil separatists attacked a Colombo-bound train in the Jaffna district, rose to 38 yesterday with the recovery of four more bodies from the wreckage.

According to official sources, 27 soldiers and 11 civilians were killed in the incident. This was the biggest loss of life suffered by the Army since separatists began their campaign in 1976.

"THIS WAS THE BIGGEST LOSS OF LIFE SUFFERED BY THE (SRI LANKAN) ARMY"
- THE TIMES

*THEREFORE ...........*

*LET US CONCENTRATE OUR FORCES FOR A COORDINATED STRUGGLE TO ACHIEVE LIBERATION.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# TELO INTRODUCES NEW ELEMENT TO THAMIL EELAM STRUGGLE

20th November 1984 and 19th January 1985 will be remembered by TELO with a sense of pride and achievement. TELO introduced a new element in the confrontation with the Sri Lankan Sinhala Security Forces, which no other militant group earlier adopted in combating State Terrorism. To eliminate Thamil Eelam oppressors, TELO engineered a new tactic by engaging the Armed Forces in one place and attacked them in another place. TELO, during these massive attacks, consider every minute detail of the situation that may arise due to the attack. It tries to minimise the reprisals by State Terrorists and concerns very much about the safety of the people. This incident provoked "The Guardian" London to write: "THis new professionalism must worry the security authorities", "Taken together these two incidents..., and the raid on the Police Station – could shatter the morale of the Armed Forces and lead to a political destabilisation with which Jaywardene government could not cope".



The Yal Devi train blown up by TELO Army between Murigandy and Mankulam.

53 Israeli trained police commandos who woke up from their slumber on the dawn of 20th November 1984 little realised that they would never see the dusk that day. They were destined to die in the disaster that was brought about by the massive TELO attack on the Chavakachcheri police station. The police station was attacked by TELO in order to call the Sri Lankan Troops out of their Camps to engage them in combat.

TELO expected a reinforcement arriving to the aid of the Chavakachcheri Police Station, and lay in ambush at Kaithady. They laid land mines and as expected, a reinforcement was rushed in from Elephant Pass Army Camp. They fell into the TELO trap. Many dies in the mine blast and those who survived were mowed down by the TELO army. The death toll rose to 68 at the Kaithadi attack. Three armoured cars were also fully destroyed. Army was ordered to be confined to barracks and the usual backlash was avoided. TELO army captured a haul of modern weapons in these assaults.

The Colombo bound Yal Devi carrying the Sri Lanka State precious cargo was never destined to reach its destination, because of the TELO assault on 19th January 1985. This incident took place at 8.30 p.m. between Murigandy and Mankulam about 70 Km from the northern Capital, Jaffna. 298 soldiers were killed in the attack – the biggest single loss suffered by the government forces in their war against Tamil Liberation fighters.

A land mine was laid to prevent reinforcements reaching the place of the train disaster. TELO by these massive assaults turn the pattern of ambushes and skirmishes, the usual guerrilla tactics to massive assaults which will take the confrontation between the Armed Forces and the militant liberation fighters to a people's armed struggle.



Modern weapons captured by TELO Army in both Chavakchch

"THE PEOPLE'S ARMED STRUGGLE IN EELAM IS THE HIGHEST FORM OF POLITICAL ACTION. IT IS ALSO A REVOLUTIONARY CATALYST IN SRI LANKA'S IMPERIALIST SATELITE SITUATION.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொக்காவில் இராணுவ முகாம் மீது துணிகரத் தாக்குதல்

## 25 நிமிடங்களில் 48 சிறிலங்கா இராணுவம் அழிப்பு

## "மிசோ" உட்பட ஒன்பது ரேலோஸ்ட்டுக்கள் வீரமரணம்

09/05/85 அன்று தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 35 தன்மானச் சிங்கங்களால் கொக்காவில் இராணுவ முகாம் தாக்கப்பட்டது. நேரடிச் சமரில் 48 ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். இராணுவ முகாம் கட்டடம் ஒன்று தரைமட்டமாக்கப்பட்டது. போர் முனையில் அதிவேகமாக முன்னேறிச் செல்கையில் தாக்குதலுக்குத் தலைமை தாங்கிச்சென்ற வீரமறவன் மிசோ உட்பட, தமிழ்த்தாயின் தவப்புதல்வர்கள் ஒன்பது பேர் களத்தில் பீரங்கிக் குண்டுகளை மார்பில் தாங்கி, புறநானூற்று வரலாறு படைத்து வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழீழப் போராட்டத்தை மழுங்கடிப்பதற்காக தமிழீழப் பிரதேசங்களில் நாளுங்கொலை கொள்ளை தீ வைப்பு, கற்பழிப்பு என்று உலகில் நாகரீக சமுதாயம் வெட்கித் தலை குனியும்படியான காரியங்களில், தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

இந்தக் கொடுஞ்செயல்களையெல்லாம் நிரம்பச் செய்து தமிழீழத்தில் தமிழினத்தைப் பூண்டோடு அழிப்பதற்காக இஸ்ரேல், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிடமிருந்து, நவீன ரக ஆயுதங்களையும், ஆலோசனைகளையும் பெற்று தமிழ்ப்பேசும் மக்களை மிக மூர்க்கமாகத் தாக்கி வருகிறது. கொடுமைகளிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும், தமிழின அழிவைத் தடுத்து நிறுத்தவும், தாயகத்தில் இறைமையை மீட்டெடுக்கவும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தொடர்ச்சியாகப் போராடி வருகிறது.

இப்போராட்ட முன்னெடுப்பின் ஒரு வடிவமாகவே கொக்காவில் இராணுவ முகாம் 09/05/85 அன்று எமது இயக்க வீரர்களால் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது. பட்டது.

தாக்குதல் நடாத்துவதற்குச் சில தினங்களுக்கு முன்னால் ஸ்ரீலங்கா அரச திணைக்களம் ஒன்றிலிருந்து, அரசுக்குச் சொந்தமான இரண்டு புல்டோசர்களைக் கடத்தி வந்து, குண்டு துளைக்க முடியாதபடி உலோகத்தால் கவசமிட்டு, நிலக்கண்ணி வெடிகளை அப்புறப்படுத்தக்கூடிய நிலக்கிளறி வேலைப்பாடுகளும் புல்டோசரின் முன் பக்கத்தில் செய்யப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

....

### வீர அஞ்சலி

வீரமறவனே!
ஆர்ப்பரித்து களம்
புகுந்தாய்
ஆக்கிரமிப்பாளரை
துவம்சம் செய்தாய்
அந்தோ—ஒரு சேதி
ஆறாத்துயரமதில் எமை
ஆழ்த்திவிட்டாய்
தோழனே!
இன்னல்கள் பல
நேர்ந்த காலம்
இடுக்கண் தீர்த்து
தனி நிகரானாய்
இன்று, நிரந்தரப்பிரிவை
தந்துவிட்டாய்
இரக்கமற்ற கயவர்கள்
இழிந்துபடும் நாள்
வெகுதூரம் இல்லை.



தோழர் மிசோ ஞானேஸ்வரன்

இறுதியில்—உன்
மூச்சுக்குழியில் பிறந்த
உஷ்ணக் காற்றே
இக்கொடியவர்களைச்
சுட்டெரிக்கும்
உன்னை!
இழந்து விடவில்லை
நம் நெஞ்சங்களில்
வாழுகின்றாய்
நம் கரங்களை
உயர்த்துகின்றாய்
நம் வலிமையை
கூட்டுகின்றாய்
நம்மை வேகங்கொள்ளச்
செய்கின்றாய்
தொடர்வோம்
உமது பணியை
வென்றெடுப்போம்
தமிழ் ஈழமதை.

## அரச கூலிப்படையின் அராஜகத்திற்கெதிராக எமது மக்கள் இராணுவத்தின் செயற்பாடு.

### கொக்காவில்....

09/05/85 வியாழன் அதிகாலை 6.45 அளவில் இராணுவ முகாம் கதவுகளை உடைத்துக் கொண்டு கவசமிடப்பட்ட புல்டோசர்கள், இராணுவ முகாம் வளவில் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகளை அப்புறப்படுத்திக் கொண்டு கம்பீரமாக இராணுவ முகாமை நோக்கி விரைந்தது. வண்டியிலிருந்து இராணுவத்தினரை நோக்கிக் குண்டுகள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன. போராளிகள் முகாமினுள் நுழைந்தால், நிலக்கண்ணி வெடிகள் வெடிக்க வைத்து தாக்குதலிலிருந்து தப்பி விடலாம் என நம்பியிருந்த இராணுவத்தினர் - அவை அப்புறப்படுத்தப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது கண்டு இனி கொண்டு "மகே அம்மே" என்று அலறிக் கொண்டு ஓடினார்கள். இதேவேளையில் பல இராணுவத்தினர் எமது போராளிகளின் குண்டுகளுக்குப் பலியாகிக் கொண்டிருந்தார்கள்.

சில நிமிட நேரத்தில் இராணுவ முகாம் கட்டடம் ஒன்றைத் தரை மட்டமாக்கிய பின் முகாமின் மற்றைய கட்டடத்தை நோக்கித் தாவேத் தலைவன் மிசோவின் கவச புல்டோசர் விரைந்து சென்ற போது, புல்டோசர் நிலத்தில் புதையுண்டு, முன்புறமாகவோ, பின்புறமாகவோ அசைக்க முடியாதவாறு நின்று போய்விட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்காவின் இராணுவம் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, அமெரிக்க நவீன ரக பீரங்கிகளால் புல்டோசரை நோக்கிச்சுட்டது. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வளர்ச்சிக்காக மிகுந்த உளத்தூய்மையுடன் தன்னை அர்ப்பணித்த தியாகமறவன் மிசோவும் ஏனைய போராளிகளும் அந்த நேரத்தில் உயிரைத் துச்சமாக மதித்து கவச வண்டியிலிருந்து வெளியே குதித்து முனை முகத்து நின்று தங்களின் உயர் இயல்தகு வேகத்தில், ஸ்ரீலங்காவின் கூலிப் படைகளை நோக்கிக் குண்டு மாரி பொழிந்தனர். குண்டுகள் அனைத்தும் குறிதவறாமல் எதிரிப் படையைக் கொன்று குவித்தன.

ஸ்ரீலங்காவின் கூலிச் சிப்பாய்களில் மொத்தம் 48 பேர்களை நேரடிச் சமரில் கொன்று மிகப்பெரிய சாதனை ஒன்றைச் செய்து முடித்த வேளையில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் இமாலயத் தாக்குதல்கள் யாவற்றிலும் பங்கு கொண்டு, தமிழீழ மக்களின் நல்வாழ்வுக்காகத் தன்னலம் கருதாது போராடி வந்த அஞ்சாமறவர்களான மிசோ, பவா, ஜெராட், விவன், குமார், ரவி, தரன், அஜந்தன், பாலசிங்கம் ஆகியோர் எதிரியின் பீரங்கிக் குண்டுகளை, மார்பில் தாங்கி, புறநானூற்று வரலாறு படைத்து தமிழீழத் தாய்க்குத் தங்கள் இரத்தத்தையும், உயிரையும் காணிக்கையாக்கி தமிழீழ மண்ணில் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

தமிழீழப் போராட்டத்தை ஒடுக்க எத்துணை நவீனரக ஆயுதங்களைக் குவித்தாலும் அத்தனையும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் முன்னால் தவிடு பொடியாக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# DARING ATTACK BY TELO ON KOKKAVIL MILITARY CAMP

## 48 Soldiers killed — 9 Teloists including 'Mizo' become Martyrs

Kokkavil Army Camp was a target for attack by TELO Freedom Fighters on 9th May 1985. 48 Sri Lankan Soldiers lost their lives. while nine Teloists. including its commander 'Mizo' who courageously lead his fighters against great odds became Martyrs.

Sometime prior to their attack. Teloists hi-jacked two Bulldozers belonging to the Government department. converted them into a mine sweeper and bullet-proof vehicle. Along with these they entered the Kokkavil Army Camp. facing cannon fire. Teloists attacked the Camp fiercely. The soldiers thought that the land mines they laid on the entrance to the Camp would have prevented the movement of the Militants but when the latter advanced without any hindrance. they got frightened and started running in panic shouting "Mage Amme" – My Mother. A number of them met their fatal end to the fire of the Militants.

One of the buildings in the Army Camp was razed to the ground. The Militant leader. Mizo. was advancing towards another building. Unfortunately his bulldozer stuck to the ground and was immobilized The soldiers opened fire using the modern cannons obtained under American Aid. Mizo. who rendered yeoman service to the cause of the TELO Movement and his men jumped out of the bulldozer. faced the enemy and fired back. Fate destined otherwise and Mizo and his valiant eight comrades were killed in the encounter.

48 soldiers died on the spot. Mizo who participated in every attack of the TELO, who sacrificed everything for the cause of TELO and Thamil Eelam and his trusted comrades Bhava. Jeyrad. Venus. Kumar Ravi. Paran. Ajanthan and Balasingam. bownd before fate and joined the ranks of Martyrs for Thamil Eelam Liberation Struggle

With a view to blunt the enthusiasm for the liberation of Thamil Eelam. the Sri Lankan terrorist Sinhala Forces indulged in looting. murder. mayhem. arson. rape and stand condemned before the eyes of the civilized Nations They indulge in the genocide of the Tamils aided and abetted by the Imperialists and their stooges. U S A . Britain. Israel. South Africa and Pakistan The Sri Lankan State obtains arms and advice from these States to suppress the Liberation Struggle of the Eelam Tamils

TELO is determined to defend the honour and respect of the Eelam Tamils. save them from the tyranny of the Sinhala Buddhist Chauvinists and will fight to the hilt to prevent the genocide of the Tamils The attack on the Kokkavil Army Camp on 9th May 1985 is a step in this direction No power on earth can subjugate the EELAM TAMIL NATION

## HOMAGE TO TELO MARTYRS

TELO Freedom Fighters are second to none in joining the ranks of Martyrs in the cause of Thamil Eelam Struggle. On 9th May 1985. nine brave Liberation Fighters sacrificed their blood and paid the supreme sacrifice – their lives and TELO pays its humble tribute and homage to these Martyrs.



Comrade A. Gnanasekaran alias Mizo

Leading the Martyrs is the valiant fighter A Gnanasekaran alias Mizo who hails from Karainagar Mizo is one of the leading fighters of the Movement who was in the forefront of the massive TELO operations against the Sri Lankan Forces. The Chavakachcheri Police Station attack. the Yal Devi Train attack and other operations

*" OUR ARMED STRUGGLE FOR LIBERATION IS MORAL BECAUSE IT IS A PEOPLE STRUGGLE AGAINST OPPRESSION AND TERROR"*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வவுனியா போலிஸ் நிலையம் தகர்ப்பு

# 75 அதிரடி போலிஸ் பலி

## ராக்கெட் தாக்குதலில் இராணுவ ஹெலிகொப்ரர் அழிக்கப்பட்டது.

29.9.85 அன்று வவுனியா பொலிஸ் நிலையம் மீது ரெலோ போராளிகளின் தீர மிக்க தாக்குதலால் 75க்கு மேற்பட்ட அதிரடி பொலிசார் மாண்டனர். ராக்கெட் தாக்குதலினால் கட்டிடம் பலத்த சேத முற்றது. இராணுவ ஹெலிகொப்ரர் விமானம் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. 10க்கு மேற் பட்ட இராணுவ வாகனங்களும் முற்றாக அழிக்கப் பட்டது.

மற்றும், பொலிஸ் நிலையம் நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் பாதையில் வைக்கப்பட்ட கண்ணி வெடியில் சிக்கியதில் 14 இராணுவத்தினர் மாண்டனர்.

இவ் இனவெறி அரசின் இனவெறிச் செயல்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவர தமிழ் பேசும் மக்களின் விடுதலையை வென்றெடுக்க, மக்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க — அதற்கான தயாரிப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி தீர்க்கமான சிந்தனையுடனும், தீவிரமாகவும் செயல்பட்டுவரும் எமது இயக்கமான தமிழீழ விடுதலை இயக்கத்தின் வீர மிக்க போராளிகளினால்

வவுனியா நகரசபை கட்டிடத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம் தகர்த்தெறியப்பட்டது.

இந்நிலையம் வடமாகாணத்தில் உள்ள மிகப் பெரிய பொலிஸ் நிலையங்களில் ஒன்றாகும். ரெலோ போராளிகளின் இத் தாக்குதலில் 75க்கு மேற்பட்ட பொலிஸ் கொமாண்டோக்கள் பலியாகினர். ராக்கெட் தாக்குதலில் கட்டிடத்தின் பல பகுதிகள் பலத்த சேதமுற்றன. இராணுவ ஹெலிகொப்ரர் விமானமும் சுட்டு சேதப் படுத்தப்பட்டது.

மற்றும், அங்கிருந்த அத்தனை வாகனங் (ஜீப், ட்ரக்குகள்)களும் சேதப் படுத்தப் பட்டது.

மேலும், இத் தாக்குதல் நடந்த இடத்தை நோக்கி ஜீப்புகளிலும், ட்ரக்கு களிலும், கவச வாகனங் களிலும் விரைந்து வந்து கொண்டிருந்த இராணு வத்தினர் வரும் பாதையில் அதாவது, கண்டி வீதியில் வவுனியா தமிழ் மகா வித்தியாலத்திற்கு முன்பு முன் கூட்டியே எதிர் பார்த்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கியதில் ஸ்தலத்திலேயே 14 இராணுவத்தினர் மாண்டனர்.

போர் நிறுத்தத்தை மீறி வவுனியாவிலும் திருகோண மலையிலும், மற்றும் சில இடங்களிலும் நூற்றுக்கணக்கான தமிழ் பேசும் மக்களைப் படுகொலை செய்து வரும் இவ் இனவெறி அரசுக்கு இத்தாக்குதல் மூலம்:

''நாம் அமைதியை குழப்பும் நடவடிக்கைகளில் என்றும் இறங்க மாட்டோம். ஆனால், தொடர்ந்து கொண்டிருக்கும் எமது மக்களின் அழிவைப் பார்த்துக் கொண்டு வெறுமனே கை கட்டிக் கொண்டு சும்மா இருந்து விடமாட்டோம்'' என அறியத தருகிறோம்.



Armoured Personnel Carrier (APC) captured by TELO Army from Gurunagar Camp

## கெரில்லாத் தாக்குதலின் மற்றொரு அதிரடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 40 இலட்சம் தமிழர்களின் அழிவைத் தடுக்க நாதி இல்லையா?

### ஈழத் தமிழரின் வேதனைக் குரலை உலகறியச் செய்திட

# போராளிகளுக்கு வாய்ப்பளிப்பீர்!

## ஐ. நா. மன்றத்திற்கு

### சிறீ. சபாரத்தினம் கடிதம்!

சென்னை, அக். 16:

இலங்கையில் சிறுபான்மையினராக உள்ள தமிழர்களின் அவலநிலை பற்றிஐ.நா.சபையில்எடுத்துரைக்க தமிழ்ஈழவிடுதலை அமைப்பிற்கு (டெலோ) அனுமதிஅளிக்கவேண்டும் என்று அந்த அமைப்பு கோரியுள்ளது.

'டெலோ' தலைவர் சிறீ சபாரத்தினம் ஐ. நா. பொதுச் செயலருக்கு, இவ்வாறு அனுமதி கேட்டு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கையில் 40 லட்சம் தமிழர்கள் அடிமைப்படுத்தப்பட்டு, சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர். பல நூற்றாண்டு காலமாக தாங்கள் வசித்து வந்த மண்ணில் அடியோடு பூண்டற்றுப் போகும் அபாயம் அவர்களை எதிர்நோக்கியுள்ளது. இந்த நாற்பது லட்சம் பேரின் வேதனைக் குரலை ஐ. நா. பொதுச்சபை முன் எழுப்ப எங்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று சிறீ. சபாரத்தினம் இக்கடிதத்தில் கூறியுள்ளார். அதில் அவர் மேலும் கூறுவதாவது:-

விஷயம் தெரியாத உலக மக்களை ஏமாற்றுவதற்காக நாங்கள் பயங்கரவாதிகள் என்று சில தலைவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. நாங்கள் பயங்கரவாதிகள் அல்ல. எங்கள் மக்களுக்காக நீதி பெறுவதற்கான அமைதிகரமான வழி முறைகள் அனைத்தையும் கையாண்டு பார்த்த பிறகே துப்பாக்கி ஏந்தியுள்ள கண்ணியமும், கவுரவமும் வாய்ந்த போராளிகளே நாங்கள்.

இந்தத் துப்பாக்கி எங்கள் கைக்கு ஒரு சுமையாகத்தான் உள்ளது. எங்களுடைய லட்சியத்தை கண்ணியத்துடனும் கவுரவத்துடனும் அமைதிகரமான முறையில் அடைவதற்கான வேறு வழி ஒன்று ஐ. நா. சபை காண்பிக்குமேயாகில் இந்தத் துப்பாக்கியை நாங்கள் தூக்கி எறிந்துவிடுவோம்.

விடுதலைக்காக நாங்கள் நடத்திவரும்போராட்டம் பற்றியஉண்மையான தகவல்களையும், அமைதியை விரும்பும் அப்பாவிகளான லட்சோபலட்சம் மக்களுக்கு ஜெயவர்த்தனாவின் சர்வாதிகார ஆட்சி இழைத்து வரும் கொடுமைகளையும் ஐ. நா. அவை முன்பு எடுத்துவைக்க விரும்புகிறேன். தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றிய அசைக்க முடியாத ஆதாரங்களை எடுத்துக் காட்டவும் விரும்புகிறேன்.



இது வரை இலங்கை அமைச்சர்கள் உலகத் தலைவர்களிடம் எடுத்துரைத்து வந்திருப்பவை அரைகுறைஉண்மைகளும் அப்பட்டமான பொய்களுமே. அரசாங்கத்துருப்புகள் 6000 தமிழர்களை ஈவிரக்கமின்றி கொன்று குவித்திருப்பதையும், 4200 தமிழர்கள் அரசாங்கச் சிறைச் சாலைகளிலும் சிறைமுகாம்களிலும்வாடி வதங்கி வருகின்றனர் என்பதையும் ஐ. நா. சபை தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்தக்கடிதத்தின் துவக்கத்தில், ஈழத்தமிழர் விடுதலை இயக்கம் பற்றிய விவரங்களை திரு. சிறீ. சபாரத்தினம் குறிப்பிட்டுள்ளார். அதன் விவரம் வருமாறு:

தமிழ் ஈழ விடுதலை அமைப்பாகிய நாங்கள் இந்த அழகிய தீவான இலங்கையிலே 40 லட்சம் பேர் கொண்ட எமது சிறுபான்மை சமூகத்தாரை விடுவிப்பதற்கான போராட்டத்தின் ஈட்டிமுனையாகவிளங்கிவருபவர்கள்.

ஜெயவர்த்தனா, மற்றும் அவருக்கு முன்னால்இருந்து வந்த இனவெறி ஆட்சியாளர்கள் எங்களை இடைவிடாமல் ஒடுக்கி வைத்திருக்கவும்', மனிதப்பிறவிகளுக்கு ஒவ்வாத கேவலமான நிலைமையில் எங்களை அமுத்திவைக்கவும் தங்களால் இயன்றதையெல்லாம் செய்து வைத்திருக்கிறார்கள். எண்ணிப் பார்க்கக் கூட முடியாத அளவுக்கு கொடுமைகளை இழைத்து வந்திருக்கிறார்கள்.

மேற்குறிப்பிட்ட அடக்கு முறைகளுக்கு எதிரா இந்த நியாயமான யுத்த தின் முன்னணியில் எ ளுடன் எண்ணற்ற இளைஞர் அமைப்புகள் தோளோடு தோள்நின் போரிடுகின்றன. "த ஈழம்" ஆகிய எமது த கத்துக்காக இன்னுயி யும்ஈந்த எண்ணற்ற போராளிகளின் வீ வரலாறு செறிந்ததாகு

எமது வரலாறு; இப்போது இந்தத் தாயகம் சிங்கள அரசின் இனத்திமிர் பிடித்த படைகளின் ஆக்கிரமிப்பில் சிக்கித் தவிக்கிறது. கொழும்பிலுள்ள கொடுங்கோலர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலியாகியுள்ள இந்த இளைஞர்கள் அறிவுக் கூர்மை, செயலாற்றும் கடும் உழைப்பு ஆகியவற்றுக்குப் பேர் போன எமது சமுகத்தின் மிகச் சிறந்த செல்வங்களாகும்.

அந்தோ, நாகரிகத்துக்கு ஏற்பட்ட கதியைப் பாருங்கள். வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் ஜனநாயகங்களின்கீழ்வரலாற்றுக்கு முந்தைய இருண்ட காலத்தின் காட்டுமிராண்டித்தனமே அல்லவா கோலோச்சி வருகிறது!

இவ்வாறு ஒடுக்கப்பட்டுள்ள ஒரு இனம் ஐ. நா. சபையைத் தவிர்த்துவேறு யாரிடம் போய் முறையிட்டுக்கொள்ள முடியும்?

இட்லரின் நாசிசத்தால் ஆழக்குழிதோண்டி புதைக்கப்பட்ட லட்சோபலட்சம் மக்களின் பிணங்களின் மீது எழுப்பப்பட்டதேஅல்லவா இந்தஐ.நா. சபை. அத்தகைய ஒரு நிலைமை மீண்டும் வரக் கூடாது என்ற ஒரே நோக்கத்துக்காகவே உருவாக்கப்பட்டதல்லவா இந்த மாண்புமிகு அமைப்பு?

—இவ்வாறுசிறீ.சபாரத்தினம் ஐ. நா. பொதுச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் எழுதியுள்ளார்.

## திட்டமிட்ட இன ஒழிப்பை

## ஐ. நா. மன்றத்தின் செயலதிபருக்கு முறையிடுகிறார் எமது செயலதிபர்.

www.tamilarangam.net

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

— 1985

# TELO CALLS FOR CO-ORDINATED MILITARY ACTION

**"ACTION NOW. NO TIME FOR POLITICAL DISCUSSIONS. DAILY OUR PEOPLE ARE FALLING VICTIMS TO SRI LANKAN STATE TERRORISM. TO PREVENT THE TOTAL ANNIHILATION OF THE PEOPLE OF THAMIL EELAM CO-ORDINATED MILITARY ACTION BY ALL LIBERATION MOVEMENTS IS IMPERATIVE AND VERY ESSENTIAL" DECLARED SRI SABARATNAM, LEADER OF TELO IN AN INTERVIEW TO A JOURNAL.**

Brutal killings of innocent Tamil speaking people, raping of Tamil women, torturing of Tamil youths by the Armed Forces of the Sri Lankan fascist State, is a daily occurrence in Thamil Eelam. Corpses are floating on the river of blood in the streets of Thamil Eelam. Tamil girls are being brutally raped by Sinhala chauvinists shouting "You would bring forth not Tamil Tigers but Sinhala Lions!" Innocent Tamil youths are arrested in the name of Terrorism, brought to various Army Camps which resemble the Concentration Camps of the Israel Zionists and subjected to inhuman and gruesome torture with the advice of **MOSSAD** the Master Torturers and lankeys of US Imperialism. The helpless Tamils of Eelam unable to bear the brutality of the Sinhala brutes are fleeing the country daily to neighbouring Tamil Nadu in India as refugees. But the Security Zone prevents these helpless people fleeing the land of birth. They are trapped and fall victims to the most indisciplined Army in the World — the Sri Lankan fascist Security Forces. Tamil fishermen are banned from their profession of fishing and they are experiencing starvation.

The modern Hitler, J.R. Jeyawardene, terminating the year long All-Party Round Table Conference, launched the most murderous military action witnessed in recent times. The Sri Lankan fascist State lead by the chauvinistic cunning Sinhala Buddhist leader JR is aided and abetted in the genocide of Tamils by the International Imperialistic Terrorists as **CIA, MOSSAD, SAS** and the South African architects of apartheid. By settling two lakhs of armed Sinhala thugs and convicts in the traditional Tamil lands, JR feels that he could solve the ethnic problem. In this he follows the footsteps of Malaysia which solved the Chinese problem that way. Says fascist JR: "Britain wants **IRA** to give up terrorism to find a solution to Irish problem. Similarly, I want the Tamil militants to give up Thamil Eelam demand to find a solution to this problem". A wishful thinking indeed!

The Indo-Sri Lanka relationship is seriously affected as a result of the Sri Lankan Navy interfering in the fishing rights of the Tamil Nadu fishermen. The killing and torturing of Tamil Nadu fishermen and looting of nets and catches in Indian waters has lead to deterioration in Indo-Sri Lanka relationship, which eventually lead India to arrest the Sri Lanka Naval gun-boat. These aggressive attitude of Sri Lankan Navy prompted the fishermen of Rameswaram to take up an aggressive posture and demand the Central Government through Tamil Nadu State Government to stop these atrocities. They are even preparing a boat march to Katchativu to ascertain their traditional fishing rights in the Palk Strait.

Ironically, in Tamil Nadu some militant movements indulging in intercene "warfare". Instead of aiming their guns at the Sinhala chauvinists, they are training their guns on their brother Eelam fighters. Poster warfare, press releases, levelling wild accusations against each other, indulging in atrocities against each other are their pastime nowadays. Instead of fighting the Sinhala State fascism, they

*"THE PEOPLE'S ARMED STRUGGLE IN EELAM IS THE HIGHEST FORM OF POLITICAL ACTION.*

*LET US CONCENTRATE OUR FORCES FOR A COORDINATED STRUGGLE TO ACHIEVE LIBERATION.*

*IN UNITY LIES OUR STRENGTH."*

*"PEOPLE OF EELAM ARISE!*

*DEFEAT SRI LANKA STATE DOMINATION AND OPPRESSION OF ALL FORMS.*

*STAND TOGETHER AND UNITE IN THE LIBERATION STRUGGLE.*

*FORWARD TO VICTORY.*

*WE SHALL CONQUER."*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# LTTE JOINS ENLF

In our first issued of 'TELO TIMES' we invited the major Thamil Eelam movements to join Eelam National Liberation Front (ENLF) to fight the cause of Thamil Eelam and the salvation of her people. In this issue we are pleased to inform the Tamil speaking people and others that we are proud to announce one of the major movements entered into alliance with ENLF. This strengthens the resolve of the Liberation fighters of Thamil Eelam to fight the Imperialists and their stooges and redeem Thamil Eelam from Sri Lanka government oppression.

Liberation Tigers of Tamil Eelam (LTTE) by joining the ENLF has demonstrated that UNITY among various movements should come from within and that in the hour of need whatever differences ideological or otherwise each group has. will shed them and come together to serve the cause of Thamil Eelam. The other major group PLOT is still outside the ENLF. Negotiations are going on. and we are sure. PLOT will join ENLF at the earliest opportunity.

TELO, EROS and EPRLF entered into a pact in April 1984 and in an year. April 1985. LTTE too joined the ENLF. It is better to be late then never. There are many reasons for these movements to put their heads together in ENLF. The Press release issued by the four movements registers the following reasons for their decision to come together.

The alliance while consolidating the revolutionary forces on a co-ordinated programme of action. will strengthen the armed resistance campaign against the Sri Lankan State.

Escalation of State violence reinforces the necessity of Unity among Freedom Fighters. If violence and genocide against the Eelam people has to be curbed. the groups should chart out a joint politico-military strategy to advance the process of national Liberation.

The four movements came into the fold shedding their differences for the sake of unity and for the salvation of the Eelam Tamil speaking people. They have agreed to sort out any differences that may cromp up among them. through discussion

ENLF of the three TELO. EROS and EPRLF achieved a lot in the past. They bear a common name ENLF. It has embraced into its fold major group LTTE. The new Front has issued jointly a statement relating to the so-called Hindu-Muslim clash. the child born out of the union of Imperialistic stooge. Sri Lanka and the Zionists the Mossad



(Left to Right) SRI SABARATNAM (Leader of TELO), V. PRABHAKARAN (Leader of LTTE), BALAKUMAR Executive Committee of EROS) and PADMANABHA (Secretary General of EPRLF)

So far PLOT the other major group is standing out of the ENLF. Attempts are going on to bring it into alliance with ENLF. It is the hope of the rest and the Tamil speaking public. that PLOT will be in the union very soon. When this is achieved. the United Eelam National Liberation Front will be the sole mouth-piece of the Tamil speaking people of Eelam. It will represent the Nationalism of the Eelam people. Anyone who wishes to solve the Thamil Eelam issue has to negotiate with ENLF — Voice of the Eelam Nationalism.

The TULF after receiving a mandate to fight and secure Eelam. lost that golden opportunity because of the inherent weakness of that organisation.

The governments of India and Sri Lanka considered the Eelam issue as a conflict between Sri Lanka government and TULF. But the major attacks by TELO and operations by other groups forced them to abandon this opinion. President Jeyawardene's government realising the truth thought it prudent to terminate the political drama paraded as the Round Table Conference. and behind the scene. sent unofficial emissaries to apprach the Militant Organisation. The Sri Lankan government publicly proclaimed that there is no point in negotiating with TULF as it has lost the support of Thamil Eelam people. No tangible solution to ethnic problem will emerge the Sri Lankan government realised of course very late — out of negotiations with TULF.

At present ENLF is the cynosure of the people of Thamil Eelam. Sri Lanka and the World. The Front is aware of this and jointly there are discussions now to meet the political. military and other aspects of the issue. Resistance to Sri Lanka State chauvinism and oppression of course will be maintained

PLOT, which stands out of the ENLF, should realise the need for joining the ENLF to advance the cause of Eelam Struggle. The Front will welcome it. This will enable the Front to face the music of the Sri Lankan State better and give her a staunch fight to free Thamil Eelam from its clutches!

are playing politics among themselves. These groups are turning a Nelsonian eye towards the grave situation in Thamil Eelam. Of course "unity" everyone wants! All are for unity in word not in deed! TELO and other two movements EROS and EPRLF came under one banner last April. It is now called Eelam National Liberation Front (ENLF). ENLF has proved beyond doubt that only concerted action among the movements themselves could bring about UNITY. As a result it achieved so many in so short a time.

The LTTE has agreed to join the TELO EROS-EPRLF as the fourth major movement joining the United Front. ENLF. PLOT is engaged in dialogue with the ENLF to join the front.

The thought of the Eelam Liberation Movements coming together sends tremors within JR. He shudders in his shoes of the impending head on clash with a unified Eelam Liberation groups. Massive TELO onslaughts against the mercinary indisciplined Sinhala fascist forces, and the resistance offered by other militant groups have established the fact that victory is impossible for Sri Lankan State over the people of Thamil Eelam. The State forces losing over 400 lives against a single TELO Martyr has made him to sit up and think! Inter-party conflicts, conflicts within UNP. political strife. possibility of coup. student protests. mass Sinhala uprisings. all stare at him on the face.

The people of Thamil Eelam are at the cross roads. Thamil Eelam Liberators are called upon by the people to face the challenge of the Sri Lankan fascists. Let not the blood shed by so many innocent youths go in vain. Victory is for those who seek it sincerely. The situation in Thamil Eelam demands action. not procrastinations! To overthrow Sinhala fascist oppression. to redeem the lost sovereignty of the people of Thamil Eelam. to vindicate the honour and self-respect of the Thamil Eelam Nation is the call of the hour. TELO sends forth to every nook and corner of Thamil Eelam the clarion call for the united military action.

ENLF is ready. Others — are they ready to unite for military victory over modern Hitlerism and State fascism in Sri Lanka?

Thamil Eelam implores ENLF to muster other groups and march towards the goal. Victory is not far away!

*" IN UNITY LIES OUR STRENGTH. PEOPLE AT ALL LEVELS MUST UNITE. OTHERWISE DISUNITY SHALL DEFEAT THE LIBERATION STRUGGLE"*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Tamil leaders told of concessions offer

From Our Political Correspondent

The Hindu, 8-11-85

NEW DELHI, Nov. 7.

At a two-hour-long meeting today with the leaders of the ENLF, TULF and PLOT, the Foreign Secretary, Mr. Romesh Bhandari, told them that the Sri Lankan President, Mr. J. R. Jayewardene, was prepared to make some concessions on law and order, the land problem and the status of the Eastern Province.

Although he continued to be strongly opposed to the Tamil demand for a merger of the Northern and Eastern Provinces, the Sri Lankan President indicated during his talks in the Bahamas with the Prime Minister, Mr. Rajiv Gandhi, and later with Mr. Bhandari, that he was prepared to let the Eastern Province decide for itself through a referendum at an appropriate stage whether it was in favour of a closer relationship with the Northern Province.

## Ideas, not proposals

But these are only ideas and not in the nature of follow-up proposals for expanding the scope of autonomy and devolution of powers spelt out in the working paper to serve as a basis for a fresh dialogue between the leaders of the Tamil groups and the Sri Lankan Government. There was no discussion as such on the merits or demerits of these new ideas since the ENLF leaders were not inclined to engage in any further discussions with the Sri Lankan Government without some substantive concessions.

## ENLF's fear

A spokesman of the ENLF read out, on behalf of the LTTE, TELO, EROS and EPRLF, a five-page statement reviewing the peace process since the Thimpu talks and voicing the apprehensions of these militant groups that the prolongation of this futile dialogue in the present circumstances would encourage the Sri Lankan Government to utilise this interval to rearm and regroup its security forces and make a bold bid to annihilate them.

The statement also complained about the ineffectiveness of the monitoring committee which has not been able to check the repeated ceasefire violations by the security forces.

The ENLF leaders had given in writing to Mr. Bhandari when they were in Delhi last month stating quite categorically that they could not negotiate on the basis of the proposals contained in the working paper which fell far short of their expectations. This stand was reiterated today in an indirect way when they pointed out the perils of prolonging the so-called peace process in the absence of any worthwhile offer from the Sri Lankan Government.

The talks will be resumed tomorrow morning, but meanwhile the Tamil Nadu Electricity Minister, Mr. S. Ramachandran, who took part in today's discussions, met the ENLF leaders privately tonight. The Foreign Secretary has not given up his efforts to bring about a resumption of the suspended dialogue by obtaining some further clarifications from Colombo to meet some of the objections raised by the Tamil groups.

## No unanimity

An unfortunate feature of these crucial parleys is the absence of unanimity among the leaders of the ENLF, TULF and PLOT who are meeting Mr. Bhandari together but not speaking with one voice. But the Government of India has not given up hopes of persuading them to evolve a common approach so that their objections to the Sri Lankan proposals could be conveyed to Colombo and the necessary clarifications obtained in the light of Mr. Jayewardene's latest assurances.

The intention still is not merely to obtain the reactions of the Tamil leaders to the Sri Lankan suggestions contained in the working paper but urge them to come forward with alternative proposals that could meet their legitimate aspirations. It remains to be seen whether Mr. Bhandari will succeed in establishing in this manner a more equitable basis for a fresh dialogue between the Tamil leaders and the Sri Lankan Government.

The participants in today's talks on behalf of the ENLF included Mr. V. Prabhakaran (LTTE), Mr. Sri Sabaratnam (TELO), Mr. V. Balakumar (EROS), Mr. K. Padmanabha and Mr. Keetheswaran (EPRLF), while the TULF was represented by Mr. A. Amirthalingam, Mr. M. Sivasithambaram and Mr. R. Sampanthan. The PLOT leader, Mr. Umamaheswaran, has not come, but his group was represented by Mr. Vasudeva and Mr. Kanakarajan.

UNI reports from Colombo:

